வேளாண்மைப் பொறியியல் துறை

அனுப்புநர்

திரு.வி. தெய்வேந்திரன், எம்.இ., (வி.வ)
தலைமைப் பொறியாளர் (வே.பொ) ,
487, அண்ணா சாலை, நந்தனம்,
சென்னை–600 035.

பெறுநர்

ஆணையாளர்,
நகர் மற்றும் ஊரமைப்புத்துறை,
807, அண்ணாசாலை,
சென்னை.2

**கடிதம் எண். மபாஆ(க)1/11166/ 2017, நாள்: 25.04.2017**

அய்யா,

பொருள் : வேளாண்மைப் பொறியியல் துறை - மலையிடப்பாதுகாப்பு - நீலகிரி மாவட்டம் - உதகை வட்டம் - தொட்டபெட்டா ஊராட்சிக்கு உட்பட்ட உதகை ஊரகம் புல எண் 629,630/2-ல் புதிய ரிசார்ட் கட்டிடம் கட்ட பரிந்துரை வழங்கியது - புல எண் 630/2 என்ற எண்ணுக்கு பதிலாக மறுஅளவை செய்த புல எண்கள் 630/2A1,630/2B ,630/2C ,630/2E , 630/2F, குறிப்பிட்டு திருந்திய வேளாண்மைப் பொறியியல் துறையின் திருந்திய குறிப்புரை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :
1. இவ்வலுவலக கடிதம் எண். நபதி2/53611/12, நாள் 31.01.2013
2. உதக மண்டலம் செயற் பொறியாளர் (வே.பொ.) அவர்களின் கடித எண். அ/961/17 நாள்: 17.03.2017.

---

பார்வையில் (1)ல் கண்டுள்ள, கடிதத்தில் நீலகிரி மாவட்டம், உதகை வட்டம், உதகை ஊரகம் புல எண். 629 மற்றும் 630/2-ல் 19941.46 சதுர மீட்டர் பரப்புள்ள ரிசார்ட் கட்டிடம் கட்ட மலையிடப் பாதுகாப்பு குழு அனுமதி வழங்கும் பொருட்டு வேளாண்மைப் பொறியியல் துறையின் பரிந்துரை வழங்கப்பட்டது. மனுதாரர் M/s.டோட்டல் என்வியரான்மென்ட் ஹேபிடேட் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் மறுஅளவை செய்த புல எண்கள் 630/2A1,630/2B ,630/2C ,630/2E , 630/2F, குறிப்பிட்டு திருந்திய வேளாண்மைப் பொறியியல் துறையின் குறிப்புரை வழங்குமாறு கோரியதன் அடிப்படையில் பார்வை (2)ல் கண்டுள்ள கடிதத்தில் உதக மண்டலம் செயற் பொறியாளர் (வே.பொ.) மனுதாரரின் கோரிக்கையினை மறுபரிசீலனை செய்து புல எண் 630/2 என்ற எண்ணுக்கு பதிலாக மறுஅளவை செய்த புல எண்கள் 630/2A1,630/2B ,630/2C ,630/2E , 630/2F, குறிப்பிட்டு திருந்திய பரிந்துரை வழங்க பரிந்துரைத்துள்ளார். மேற்கண்ட உதக மண்டல செயற் பொறியாளர் (வே.பொ.) அவர்களின் பரிந்துரைப்படி வேளாண்மைப் பொறியியல் துறையின் திருந்திய குறிப்புரை கீழ்கண்டவாறு வழங்கப்படுகிறது.

1. மனுதாரர் M/s.டோட்டல் என்வியரான்மென்ட் ஹேபிடேட் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் ரிசார்ட் கட்டிடங்கள் கட்ட அனுமதி கோரியுள்ள இடம் நீலகிரி மாவட்டம் - உதகை வட்டம் - தொட்டபெட்டா ஊராட்சிக்கு உட்பட்ட உதகை ஊரகம் புல எண் 629,630/2A1,630/2B ,630/2C ,630/2E , 630/2F-ல் அமைந்துள்ளது.
2. நிலமானது புன்செய் நிலமாக உள்ளது. மண்வகை செம்மண் மற்றும் கருமண் மற்றும் செம்மண் வகை கொண்டதாக உள்ளது.
3. நிலத்தின் சரிவு மேற்கிலிருந்து கிழக்காக உள்ளது. நிலத்தின் சரிவு 26% முதல் 28% வரை உள்ளது.
4. பிரேரணை செய்யப்பட்ட இடத்தைச் சுற்றிலும் தேயிலைத் தோட்டங்களாக உள்ளது. விளை நிலங்கள் ஏதுமில்லை.

நிபந்தனைகள்:

5. நிலம் சமன் செய்யப்பட்டு கட்டிடங்கள் எழுப்பப்பட உள்ளதால் வெட்டு முகப்பின் முழு உயரத்திற்கும் முறையான RCC தடுப்பு சுவர் கட்டப்பட வேண்டும். கீழ்புறத்திற்கு (Lawn) புல்தரை அமைக்கப்பட வேண்டும். மேற்கண்ட இரண்டு பணிகளையும் மண் அரிப்பினைத் தடுக்கும் அவசியம் மேற்கொள்ளப்பட வேண்டும்.
6. மழைக்காலங்களில் உபரிமழைநிரினை மண் அரிப்பு ஏற்படாமல் பாதுகாப்பாக வெளியேற்ற உரிய வாட்டத்தில் கான்க்ரீட் கால்வாய்கள் அமைக்கப்பட்டு ஓடையில் சென்று சேர்க்கப்பட வேண்டும்.
7. மழைநீரினால் வரும் மண் அரிப்பினைத் தடுக்க மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் நிலச்சரிவிற்கு வாய்ப்பு இல்லாத இடத்தில் அமைக்கப்பட வேண்டும்.
8. கட்டிடம் கட்டுவதால் வரும் கட்டிட கழிவுகள் ஓடை மற்றும் நீர் நிலைகளைப் பாதிக்காதவாறு பாதுகாப்பாக அகற்றப்பட வேண்டும்.
9. ரிசாட் கட்டிடம் கட்டப்படுவதால் உண்டாகும் திட மற்றும் திரவ கழிவுகள் அருகாமையிலுள்ள ஓடை மற்றும் நீர்நிலைகளைப் பாதிக்காதவாறு மறுசுழற்சி செய்யப்பட்டு பாதுகாப்பாக அகற்றப்பட வேண்டும்.

மேற்கண்ட செயற் பொறியாளர் (வே.பொ.) உதகை அவர்களின் குறிப்புரைகளின் அடிப்படையிலும், துறையின் நிபந்தனைகள் நிறைவேற்றப்படும் என மனுதாரர் அளித்துள்ள உறுதி மொழியின் அடிப்படையிலும் நீலகிரி மாவட்டம் - உதகை வட்டம் - தொட்டபெட்டா ஊராட்சிக்கு உட்பட்ட உதகை ஊரகம் புல எண் 629,630/2A1,630/2B ,630/2C ,630/2E , 630/2F-ல் 19941.46 சதுர மீட்டர் பரப்பளவில் விடுதி கட்டிடங்கள் கட்ட மனுதாரர் M/s.டோட்டல் என்வியரான்மெண்ட் ஹேபிடேட் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு மலையிடப் பாதுகாப்புக்குழு அனுமதி வழங்க வேளாண்மைப் பொறியியல் துறையின் மண்வள பாதுகாப்பு அடிப்படையிலான திருந்திய பரிந்துரை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

(ஒம்)/– வி. தெய்வேந்திரன்,
தலைமைப் பொறியாளர் (வே.பொ).

நகல்- M/s. Total Environment Habitat Pvt. Ltd.,
4/41 Tuneri Main Road,
GCP Dodabetta,
Dodabetta Post,
Ooty-643002.

நகல்- செயற்பொறியாளர்(வேபொ), உதகை.
நகல்- மபாஆ(க)1–இருப்புக்கோப்பு

உபரி.1

//ஆணைப்படி//

27/4/17

27/04/17

உதவி செயற்பொறியாளர்(வேபொ)